**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 322/2024**
**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாக்கியசாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ரத்தினம்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், மாவட்ட குற்ற பிரிவு** |
| **Village** | : | | **Religion** | : | **கிறிஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 10), **திரு. பாக்கியசாமி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட குற்ற பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 07.05.2024–ம் தேதி காலை 11.30 மணிக்கு திண்டுக்கல் பூதிப்புரம், வடக்குத் தெருவைச் சேர்ந்த சடையன் மகன் சண்முகம் என்பவர் நிலையத்தில் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று தாடிக்கொம்பு காவல்நிலைய குற்ற எண். 171/2024, பிரிவுகள் 279, 337 இ.த.ச.வின் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். **மேற்பட்டி முதல் தகவல்**

**அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தினை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 குறியீடு செய்யப்படுகிறது**. ஆக பார்வை மகஜரில் சாட்சிகள் ராஜா, தங்கவேல் ஆகியோரின் கையொப்பம் பெற்றேன். அதன்பிறகு மற்ற சாட்சிகளான சண்முகம், கருப்பசாமி, பிரபு, வீரக்குமார் ஆகியோரைத் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.05.2024ம் தேதி 15.30 மணிக்கு மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து காயம்பட்ட வினோத்குமார் என்பவர் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்று விசாரித்து வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இ.த.ச.வில் இருந்து 279, 304(A) இ.த.ச.வாக சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மறுநாள் 10.05.2024ம் தேதி மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று பிணவறையில் வைத்து 11.00 – 12.30 மணி வரை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தும், 12.40 மணிக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக பெண் முதல்நிலை காவலர் திருமதி. சௌராம்மாள் என்பவரிடம் ஒப்படைத்தேன். அதன்பின்னர் மேற்படி காவலர் பிரேத பரிசோதனை முடித்து, உடைமைகளை உறவினரிடம் ஒப்படைத்து, காவல் நிலையம் வந்து அறிக்கை செய்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பின்னர் இவ்வழக்கின் எனது விசாரணையை முடித்துக் கொண்டு, மேல் விசாரணைக்காக

வழக்குப் கோப்பினை காவல் ஆய்வாளர் திரு. சந்திரமோகன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எதிரி தரப்பில் தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me/before me in open court on12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.12 17:19:39 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.